www.noolaham.org www.noolahamfoundation.org

# புதிய நூலகம்

இதழ் 13 15-06-2012

## நூலக நிகழ்வுகள்

நூலக நிறுவனச் செயற்பாடுகளை மேலும் பரவலாக்குவதற்காக அண்மையில் சில நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

புதிய நூலகம் செய்திமடல்களை அறிமுகம் செய்யும் நிகழ்வொன்று யாழ்ப்பாணம் வடமராட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதேபோல் கொழும்பில் நடைபெற்ற தமிழ்ச் சங்கத்தினரின் சர்வதேச எழுத்தாளர் மாநாட்டின் போது நான்கு நாட்களும் எமது தன்னார்வ தொண்டர்களால் நூலகம் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

ஈழத்து இதழ்களை ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தின் தொடர்ச்சியாக இதுவரை நூலகம் மின்னூலாக்கத் திட்டத்தில் ஆவணமாக்கப்பட்ட 400 இற்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள் பற்றிய விபரத்தை **இதழகம்** என்ற கைநூலாக வெளியிட்டுள்ளோம். அதில் சிற்றிதழ்கள், அவற்றின் ஆசிரியர்கள், ஆவணமாக்கப்பட்ட இதழ்களின் எண்ணிக்கை ஆகிய விபரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும் படைப்பாளர்கள், சிற்றிதழ் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள் எனப் பலரும் நூலகத் திட்டத்தில் தமது வெளியீடுகளை எண்ணிம வடிவத்தில் வெளியிடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளனர். கொழும்புத் தமிழ்ச் சங்க எழுத்தாளர் விழாவிலேயே ஏறத்தாழ 125 எழுத்தாளர்கள் தமது அனுமதிகளை வழங்கி நூலகச் செயற்பாட்டில் இணைந்து கொண்டுள்ளனர். படைப்பாளர்கள் வெளியீட்டாளர்கள் மேலும் சிரத்தை எடுத்து இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இதுவரை வெளிவந்த புதிய நூலகம் 12 இதழ்களின் பிரதிகளும் **படைப்பாக்கப் பொதுமங்கள் - எழுத்தாளர்களுக்கான அறிமுகம்** என்ற பிரசுரமும் கொழும்பு நிகழ்வுக்கு வந்தவர்களுக்கு வழங்கப்பட்டன.

உலகெங்கும் வாழும் தமிழ்பேசும் சமூகங்களின் தன்னலமற்ற உழைப்பினால் உருப்பெற்றிருக்கும் நூலகம் மின்னூலாக்கத் திட்டத்தை பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள் ஆகியவற்றுக்கு மேலும் விரிவுபடுத்தவும் சாதாரண வாசகர் மட்டத்திற்கு எமது அறிவுச் சேகரங்களை பகிர்ந்து கொள்வதற்குரிய வாய்ப்பினை வழங்கவும் தொடர்புடைய நண்பர்கள் மேலும் உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**தமிழ் விக்கிப்பீடியர் இரவிசங்கர்**

நூலகத் திட்டம் ஏழாம் ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடுவதையும் பத்தாயிரம் நூல்களை ஆவணப்படுத்தி உள்ளமையையும் அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டு காரணங்கள்: ஒன்று இத்திட்டத்தில் பணியாற்றும் பலருடன் மற்ற திட்டங்களிலும் பங்களித்து வருவதால், ஒரு நண்பனாக நூலகக் குழுவினரின் சாதனையைக் கண்டு மகிழ்கிறேன். இரண்டாவது சங்கத் தமிழர் காலத்துக்குப் பிறகு, தமிழர்கள் - அதுவும் இளைஞர்கள் - அதுவும் அரசு சாராமல் - அதுவும் இலங்கையின் தற்கால அரசியற் சூழலில் - மொழிக்காக ஒன்றிணைந்து ஏதாவது உருப்படியாகச் செய்திருக்கிறார்கள் என்று எண்ணி மகிழ்கிறேன்.

இலங்கைத் தமிழரின் அறிவை ஆவணப்படுத்துவதற்கு அப்பால், நூலகத் திட்டம் பல முக்கியமான விசயங்களுக்காக குறிப்பிடத்தக்க ஒரு முயற்சி.

* நமது சமூகத்தில் இனம், சமயம், பொருளாதாரம், சுற்றுச் சூழலை முன்னிட்டுத் தன்னார்வமாகவும் அமைப்பாகவும் செயல்படும் வழக்கம் இருக்கிறதே தவிர, வரலாற்றை ஆவணப்படுத்தல், மொழி வளர்ச்சி ஆகியவை குறித்துத் தன்னார்வமாகவும் தொழில் நேர்த்தியோடும் செயல்படுவது குறைவு.

* இலங்கைத் தமிழர் தொடர்பான முயற்சியாக இருந்தாலும் உலக அளவில் பரந்தும் தகுந்த இடங்களில் பிற நாடுகளில் வாழும் தமிழரின் பங்களிப்பையும் ஏற்றுச் செயற்படுவது பாராட்டத்தக்கது; முன்மாதிரியானது.

* அரசு சார்ந்தும் மூத்தவர்களாலும் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு இடையே, நூலகத் திட்டம் முற்று முழுதாக இளைஞர்களால் கனவு காணப்பட்டு செயல்வடிவம் பெற்றிருக்கிறது. நூலகத் திட்டத்தின் வியூகத் திட்டமிடல் சந்திப்புகள் சிலவற்றில் கலந்து கொண்டிக்கிறேன் என்ற முறையில், அவர்கள் எவ்வளவு தொலை நோக்குடனும் ஆழமாகவும் தீர சிந்தித்தும், அனைவரையும் கலந்துரையாடி வெளிப்படையாகவும் தங்கள் செயல் திட்டங்களை வகுக்கிறார்கள் என்பதை அறிவேன். இந்தச் செயற்பாடு தமிழ்ச் சூழலுக்கு மிகவும் புதியது. பாராட்டத்தக்கது. ஒரு சிலரின் படிப்பறையில் தொடங்கிய இத்திட்டம் ஒரு முறையான இலாப நோக்கற்ற நிறுவனமாக வளர்ந்து நிற்பதற்கு இதுவே காரணம்.

* இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பலரை நேரடியாகவே அறிவேன் என்ற முறையில், அவர்கள் எவ்வாறு ஒவ்வொரு நாளும் தங்கள் வாழ்வின் கணிசமான நேரத்தை இதற்கு ஒதுக்குகிறார்கள், இத்திட்டம் குறித்த சிந்தனையோடே செயல்படுகிறார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டுள்ளேன். இந்த அர்ப்பணிப்பு உணர்வு மிக மிக அரிது.

* இதே திட்டத்தைத் தமிழகத்துக்கும் விரிவு படுத்தலாமே என்று கோரிய போது, தங்கள் வளங்களுக்கு நோக்கங்களுக்கு உட்பட்டு இலங்கைத் தமிழரின் அறிவை ஆவணப்படுத்துவதே இயலும் என்று உறுதியாக இருந்தார்கள். எல்லாவற்றையும் செய்யப் போய் போதிய வளமும் குவியமும் இல்லாமல் தேக்கமடையும் திட்டங்கள் பல உள்ளன என்பதால், இந்த உறுதியும் தெளிவும் நன்று.

* தமிழ் என்றாலே தமிழ்நாடு என்றில்லாமல், இலங்கைத் தமிழரின் அறிவை ஆவணப்படுத்துவதன் மூலம் தமிழ் மொழிக்கு உள்ள பன்முகத் தன்மையை வெளிப்படுத்துவதாகவும் இலங்கைத் தமிழரின் அறிவை உலகில் எங்கிருந்தும் அணுகத்தக்கதாகச் செய்கிறது. தவிர, நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அங்கு தனித்து வளர்ந்த தமிழறிவு மரபை உணரச் செய்கிறது.

* நூலகம் திட்டத்தால் உந்தப்பட்டும் வழி -காட்டப்பட்டும் இன்னும் ஒரு சில திட்டங்களாவது தோன்றும். தோன்றியுள்ளன.

எழுதிக் கொண்டே போகலாம் ஆனால் , வெறும் வாழ்த்து சொல்வதோடு நிறுத்த விரும்பவில்லை. இந்தத் திட்டத்துக்கு எப்படி அனைவரும் பங்களிக்கலாம்?

* நூல்களின் மின்னாக்கத்தில் உதவலாம்.
* தளத்தின் தொழில்நுட்பப் பராமரிப்புக்கு உதவலாம்.
* இயன்ற பணத்தை நன்கொடையாக அளிக்கலாம்.
* நண்பர்களுக்கு இத்திட்டம் குறித்து தெரிவிக்கலாம்.

ஏதாவது ஒன்றைச் செய்வோமே?


# புதிய நூலகம்

இதழ் 13

15-06-2012

ஆசிரியர்
சு. குணேஸ்வரன்

இது ஒரு நூலக நிறுவன வெளியீடு
noolahamfoundation@gmail.com



புதிய நூலகம் இதழின் உள்ளடக்கம் அனைத்தும் நூலக நிறுவனத்தின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக இருக்குமென்றில்லை. வெளியாகும் கட்டுரைகளின் கருத்துக்கள் கட்டுரையாளர்களுடையவை. புதிய நூலகம் இதழுக்கென எழுதப்படும் உள்ளடக்கம் Attribution-ShareAlike 3.0 Unported (CC BY-SA 3.0) உரிமத்துடன் வெளியாகின்றது. மறுபதிப்புக்கள் அவற்றின் மூலப்பிரதியின் உரிமத்துடன் வெளியாகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலக நிறுவனமும் புதிய நூலகம் செய்திமடல்களும்

**சித்திராங்கன்**

கடந்த 19.05.2012 சனிக்கிழமை மாலை 3.45 மணிக்கு யாழ்ப்பாணம் வடமராட்சியில் கொற்றாவத்தை சமூக மண்டபத்தில் உயில் கலை இலக்கிய அமைப்பினால் இரண்டு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

சு. குணேஸ்வனின் **புனைவும் புதிதும் ஆய்வுக் கட்டுரைகளும் பிறவும்** என்ற நூல்வெளியீடும் நூலக நிறுவனத்தின் **புதிய நூலகம்** செய்திமடல் அறிமுகமும் இடம்பெற்றன.

பிரதேச மட்டங்களில் நூலக நிறுவனத்தின் செயற்பாடுகளை எடுத்துச் செல்லும் விதமாக ஏற்பாடு செய்யப்பட் இந்நிகழ்வுக்கு கவிஞர் யாத்திரிகன் தலைமை வகித்தார். வரவேற்புரையினை ஆசிரியர் க. தர்மதேவன் நிகழ்த்தினார்.

நூலகம் தொடர்பான நிகழ்வு சார்ந்து தலைமையுரையாற்றிய யாத்திரிகன்; இன்று இணையவெளியில் பெரும் பங்காற்றி வரும் நூலக நிறுவனத்தின் செயற்பாடுகள் மிகுந்த கவனத்திற்குரியன என்றார். இன்றைய இலத்திரனியல் சூழலில் அனைவராலும் இலகுவாகப் பயன்படுத்தக் கூடியதெனவும் கூறினார். பத்தாயிரம் வரையான ஆவணங்களை பதிவேற்றி வைத்துள்ள நூலக வலைத்தளத்தில் வடமராட்சியைப் பொறுத்தவரையில் 25 இற்கும் சற்று அதிகமான ஆளுமைகள் அல்லது படைப்பாளிகளின் படைப்புக்களே இதுவரை பதிவேற்றப்பட்டுள்ளமை அறியமுடிகிறது. இந்நிலையில் நூலகத்தின் செயற்பாடுகளுக்கு பங்களிக்க வேண்டிய நிலை உள்ளதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து இணைய வெளியில் நூலக நிறுவனம் என்ற பொருளில் த. அஜந்தகுமார் உரை நிகழ்த்தினார். அவர் நூலகம் தோற்றம் பெற்றதற்கான காரணங்கள், தன்னார்வ தொண்டு அடிப்படையில் ஓர் அரசு செய்யவேண்டிய வேலையை உலகமெங்கும் இருக்கும் ஆர்வலர்கள் இணைந்து செய்கின்ற பணிகள், ஆகியவற்றை எடுத்துக் காட்டி உரை நிகழ்த்தினார்.

நூலகம் எவ்வாறான ஆவணங்களை வைத்திருக்கிறது என்றும். அவை எவ்வாறெல்லாம் பயன்படக் கூடியனவென்றும் எடுத்துக் கூறியதோடு இந்தக் காலத்தில் நாங்கள் எங்கள் வீடுகளில் இரண்டு நூலகங்களை வைத்திருக்கவேண்டிய வாய்ப்புக்களைப் பெற்றிருக்கிறோம். அதில் ஒன்றுதான் மின்னூல் திட்டம் என்றும்; அதனை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

தொடர்ந்து சின்னராஜா விமலன் **புதிய நூலகம் செய்திமடல்கள்** என்ற பொருளில் உரை நிகழ்த்தினார். இதுவரை வெளிவந்த 12 செய்திமடல்களை நூலகத்தின் ஊடாக வாசிக்கக் கிடைத்தபோதும் நேரத்தைக் கருத்திற்கொண்டு 6 முதல் 12 வரையான இதழ்கள் பற்றியே தனது உரையை நிகழ்த்தினார்.

முன்னதாக அ. முத்துலிங்கம் முதல் ரவிக்குமார் வரை நூலகம் பற்றி எழுதியிருக்கும் தகவலையும் எடுத்துக் கூறியதோடு புதிய நூலகம் கொண்டுள்ள விடயதானங்கள், அவை கொண்டிருக்கக்கூடிய நிகழ்வுகள் பற்றிய தகவல்கள், படைப்புக்கள் பற்றிய அறிமுகக் கட்டுரைகள், படைப்பாளிகள் பற்றிய தகவல்கள் மிக முக்கியமானவை என்று கூறினார். எதிர்காலத்தில் மேலும் முக்கியமான புள்ளிவிபரங்களையும் இணைத்தால் நல்லது என்றும் கூறினார்.

நிகழ்வுக்கு பிரதேசம் சார்ந்த 10-15 வரையான படைப்பாளிகளும் வாசகர், மற்றும் ஆர்வலர்களுமாக 75 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கு வந்திருந்தவர்களுக்கு 7 – 12 வரையான புதியநூலகம் செய்திமடல்களின் பிரதிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக பிரதேசம் சார்ந்த நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களுக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. மற்றும் வருடாந்த ஆண்டறிக்கைப் பிரதிகள், எழுத்தாளர் அனுமதிப்படிவம், நூலகத்தில ஆவணமாக்கப் பட்டுள்ள வடமராட்சிப் பிரதேச ஆளுமைகளின் நூல்கள் அடங்கிய விரபக்கொத்து என்பனவும் வழங்கப்பட்டன.

நூலக நிறுவன தொடர்பாடல் அணி உறுப்பினரும் புதிய நூலகம் ஆசிரியருமான குணேஸ்வரன் ஏற்புரையினையும் நன்றியுரையினையும் நிகழ்த்தினார். ஆய்வாளர்களுக்கும் எழுத்தாளர் களுக்கும் வாசகர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன் படக்கூடிய நூலக நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பரவலாக்கும்பொருட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் நூலகத்தின் பணிகள் மேலும் தொடர்வதற்கு மேலும் ஆர்வமானவர்கள் முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

இறுதியாக நிகழ்வு மாலை 6.00 மணியளவில் நிறைவு பெற்றது.

புதிய நூலகம் தொடர்பான உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் noolahamfoundation@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நூலகம் செய்திமடல்கள் ஒரு பார்வை

**சி. விமலன்**

இன்றைய கணனி யுகத்தில் எண்ணிம நூலகங்கள் (Digital Library) அளப்பரிய பங்களிப்பை வழங்கி வருகின்றன. இவற்றை **சுவர் இல்லாத நூலகங்கள்** என்று குறிப்பிடுவர். அந்த வகையில் ஆவணப்பதிவுகள் பத்தாயிரத்தைத் தாண்டும் நிலையில் உள்ள புதிய நூலகம் ஈழத்து இலக்கிய உலகிற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையில்லை. அப்படிப்பட்ட புதிய நூலகம் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட செய்தி மடல்களில் என் பார்வைக்கு கிட்டிய 7 தொடக்கம் 11 வரையிலான இதழ்கள் பற்றியே இச்சிறுபத்தி அமைகின்றது.

இதழ் 7 இல் **துயர் பகிர்கின்றோம்** என்ற தலைப்பில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் நினைவுமலராக வெளியிடப்பட்டிருக்கிறது. இது தவிர ஏனைய மடல்களில் உள்ள விடயங்களை கீழ்வருமாறு ஐந்து வகையாக நோக்கலாம்.

1. நூல் அறிமுகங்கள்
2. கட்டற்ற களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து ஒவ்வொரு மடலிலும் ஒவ்வொரு எழுத்தாளர் பற்றிய அறிமுகக்குறிப்பு
3. எண்ணிம நூலக அறிமுகம் என்ற பெயரில் ஒவ்வொரு பாடசாலையிலும் எண்ணிம நூலகங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு பற்றிய குறிப்புகள்
4. நூல்களை ஆவணப்படுத்தல் தொடர்பான கட்டுரைகள்
5. ஏனைய கட்டுரைகள்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பற்றிய கட்டுரையில் ஈழப்போராட்டம் முனைப்புற்றிருந்த காலகட்டத்தில் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, வடமராட்சி பிரஜைகள் குழு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்பவற்றில் இருந்தது குறித்த பதிவுகளை கட்டுரையாசிரியர் லெ.முருகபூபதி பதிவு செய்துள்ளார். இக்கட்டுரையில் 2011 ஜனவரியில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் விழாவிற்கு ஆரம்பத்தில் கலந்து கொள்வதற்கு பேராசிரியர் சம்மதம் தெரிவித்திருந்ததும் பின்னர் எஸ்.பொ போன்றவர்களின் எதிர்ப்பினை தொடர்ந்து பேராசிரியர் பின்வாங்கி இருந்த போது முருகபூபதி தானே அவரோடு தொடர்பு கொண்டு அவரை அதில் கலந்து கொள்வதற்கு பகீரதப்பிரயத்தனம் எடுத்ததாக குறிப்பிடுகின்றார். வாசகன் என்ற ரீதியில் இவ்விடயத்தில் வேறும் சில எழுத்தாளர்கள் தங்களுடைய விடாமுயற்சியினாலேயே பேராசிரியர் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார் என்று உரிமைகோரி மார்தட்டியதும் நினைவுக்கு வருகின்றது.

நூல் அறிமுகம் என்றவகையில் இரா.நடராசனால் எழுதப்பட்ட **ஆயிஷா** நூல் அறிமுகக்குறிப்பும் சு.குணேஸ்வரனால் எழுதப்பட்ட **ஆஸ்திரேலியாவில் தமிழ்மொழி கற்பித்தல்** நூல் அறிமுகமும் பூ.நகுலனால் எழுதப்பட்ட **தமிழரின் பரவலும் மாறாம்புலத்தின் தோற்றமும்** நூல் அறிமுகமும் இடம்பெற்றுள்ளது.

ஈழத்தில் அறிவியல் புனைகதைகள் அரிதாகவே எழுதப்படுவதுண்டு. செங்கை ஆழியானின் "குந்தி இருக்க ஒரு குடிநிலம்"சிறுகதை தொகுப்பில் சில சிறுகதைகள் இவ்வகைப்பட்டவையாக இருக்கின்றன. அதன் முன்னுரையில் ஈழத்தில் தமிழில் அறிவியல் புனைகதைகளைப் படைத்ததில் தானே முன்னோடியாக விளங்கியதாக பதிவு செய்துள்ளார்.ஆனாலும் தமிழில் அறிவியல் புனைகதைகளின் முன்னோடியாக சுஜாதா கருதப்படுவதும் யாவரும் அறிந்த ஒன்றே. ஜெயமோகனும்; அறிவியல் புனைகதைகளின் தொகுப்பாக ***விசும்பு*** என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். இதை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் இரா.நடராசனால் எழுதப்பட்ட ***ஆயிஷா*** குறுநாவலும்; இன்றைய கல்வித்திட்டங்களில் நிலவும் குறைபாடுகளை சுட்டிக்காட்டும் அறிவியல் புதினமாகவும் காணப்படுகின்றது.

கலாநிதி ஆ.கந்தையாவால் எழுதப்பட்ட **ஆஸ்திரேலியாவில் தமிழ்மொழி கற்பித்தல்** நூல் புலம் பெயர்ந்து ஆவுஸ்ரேலியாவில் வாழும் இளந்தலைமுறையினரின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இதில் தாய்மொழியாகிய தமிழை அவர்கள் மறந்து விடக்கூடாது என்ற ஆதங்கத்தில் நூலாசிரியரால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் கனதியானவை. இது தனியே அவுஸ்ரேலியாவில் வாழும் புலம்பெயர் இளந்தலைமுறையினக்கு மாத்திரம் இல்லாமல் ஒட்டுமொத்தமாக உலகெல்லாம் பரந்து வாழும் புலம்பெயர் தேசத்தவர்களுக்கும் இந்நூல் சிறந்த ஒரு ஆவணமாக விளங்கும் என்றால் அது மிகையில்லை.

அடுத்து விக்கிபீடியாவில் பேராசிரியர் சிவத்தம்பி, எழுத்தாளர்கள் மாவை வரோதயன், அ.யேசுராசா, கோகிலா மகேந்திரன், அ.முத்துத்தம்பிப்பிள்ளை ஆகியோர் எழுதிய நூல்களும் அவர்கள் பற்றிய சிறிய அறிமுகக்குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றில் மாவை வரோதயன் பற்றிய குறிப்பில் அவர் எழுதிய நூல் ஒன்றின் பெயராக **வலிகாமம் மைந்தர்கள்** என்று பதிவிடப்பட்டுள்ளது. உண்மையில் அவரது நினைவாக தேசிய கலை இலக்கிய பேரவை வெளியிட்ட புத்தகத்தின் பெயர் **வலிகாமம் வடக்கு மண்ணின் மாந்தர்கள்** என்பதும் நினைவுக்கு வருகின்றது.

அவ்வாறே அ.முத்துத்தம்பிப்பிள்ளை பற்றிய குறிப்பில் அவர் 1897 இல் வெளியிட்ட பத்திரிகையின் பெயர் **வைத்தியவிசாரணி** என பதிவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியராக விளங்கிய ஆ.சிவநேசச்செல்வன் தேசிய புராதன சுவடிச் சாலையில் உள்ள பட்டியலை அடிப்படையாக கொண்டு எழுதிய **ஈழத்து தமிழ் பத்திரிகைகள் ஓர் ஆய்வு** நூலில் அ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட பத்திரிகை வைத்தியவிசாரினி எனவும் அது 1898 ஆண்டு வெளியிடப்பட்டதான குறிப்பும் காணப்படுவது சற்று குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. எனவே இம்முரண்பாட்டை தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பும் புதிய நூலகம் குழுமத்தை சேர்கின்றது.

அடுத்து புதிய நூலகம் குழுமத்தினர் நூல்களை ஆவணப்படுத்தல் தொடர்பான விடயங்களை எதிர்கால சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தும் விதத்தில் பாடசாலைகளில் நடத்திவரும் கருத்தரங்குகளையும் அவர்களால் வெளியிடப்படும் செய்தி மடல்களில் ஆவணப்படுத்தல் தொடர்பான கட்டுரைகளை புதிதாகவும் ஏனைய பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த அவை தொடர்பான கட்டுரைகளையும் பிரசுரித்து வருகின்றமை ஆவணப்படுத்தல் பற்றிய விழிப்புணர்வை பொதுசனங்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற அவர்களது வேணவாவினையே சுட்டிநிற்கிறது.

மேலும் இச்செய்தி மடல்களில் அஜந்தகுமாரை ஆசிரியராக கொண்டு வெளிவந்த **புதிய தரிசனம்** சஞ்சிகை குறித்து இராகவன் எழுதிய **புதிய தரிசனம் : ஒரு நினைவோடை** கட்டுரையில் படைப்புக்களை செம்மைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் ஈழத்தில் முதன்முதலாக ஷோபா சக்தியின் படைப்பை அறிமுகப்படுத்திய பெருமையும் புதிய தரிசனத்திற்கே சேரும் என்கிறார் இராகவன். 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஷோபாசக்தியின் **தேசத்துரோகி** சிறுகதைத்தொகுப்பிற்கு புதிய தரிசனத்தில் குணேஸ்வரன் எழுதிய இரசனைக்குறிப்பைத் தான் அவர் குறிப்பிடுகின்றார். ஆனாலும் 2002 ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற **மானுடத்தின் தமிழ் ஒன்றுகூடல்** நிகழ்வில் போர் இலக்கியம் குறித்து கட்டுரை வாசித்த நிலாந்தன் அவர்களே ஷோபாசக்தியை ஈழத்தில் அறிமுகப்படுத்தியவராக எனக்குத் தோன்றுகின்றார்.

எனவே வரையறுக்கப்பட்ட எட்டு பக்கங்களில் பல்வேறு விடயங்களையும் தாங்கி வெளிவந்துள்ள புதிய நூலகத்தின் செய்திமடல்களுக்கு ஆரம்பத்தில் இலக்கியம் சார்ந்த வாசகர்களே பயனாளிகளாக இருந்த போதிலும் இன்று சமூகஆய்வாளர்கள், பல்கலைமாணவர்கள் அரசியல் செயற்பாட்டாளர்கள் என பல்வேறு மட்டத்தினரையும் அது சென்றடைந்திருக்கிறது. தற்போதைய நூலக வசதிகளுடன் காலக்கிரமத்தில் இன்னும் அகலக்கால் பதித்து இத்திட்டம் விரிவடைந்து செயற்பட வேண்டும் எனவும் விரும்புகின்றேன்.

# ஒரு சிறு தீப்பொறி

**சேரன்**

சென்ற வாரம் நூலகம் நிறுவனத்தினரின் கனடாப் பிரிவினர் ஒழுங்கு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் தமிழ்ச் சூழலில் ஆவணப்படுத்தலும் அது தொடர்பான சிக்கல்களும் பற்றிப் பேச வாய்ப்புக் கிடைத்தது. நூலக நிறுவனம் எண்ணிம நூலகம் என்பது மட்டுமல்ல ஈழத் தமிழ் ஆவணங்கள், நூல்கள் மேலும் பல்வேறுபட்ட அறிவுச் சான்றுகளையும் பேண விழைகிற ஒரு சிறப்பான முயற்சியாகும். எண்ணிம நூலகம் பற்றிய நிகழ்வில் யாழ் நூலக எரிப்புப் பற்றிப் பேசுவதும் தவிர்க்க முடியாமல் போய்விட்டது. அமைப்பாளர்களில் ஒருவர் குறிப்பிட்டது போல, "அப்போது எமது நூலகம் எண்ணிம நூலகமாக இருந்திருக்குமானால் எரிப்பு ஏற்படுத்தி இருக்கும் பாதிப்புக் குறைந்த அளவிலேயே இருந்திருக்கும்." எனினும் அது வேறு காலம். இது வேறுகாலம். என்னையும் என்போன்ற நூற்றுக் கணக்கானவர்களையும் அரசியல் என்னும் பெருஞ்சுழலுள் இழுத்துவிட்ட காலம் அது. இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து வருகிற தகவல்களின்படி, வடபுலத்தை ஆள்வோர் யாழ் நூலகத்தின் கணினிப் பிரிவையும் கழிவுப் பிரிவாக மாற்றுகிற திடீர் ரசவாதம் செய்யும் வல்லமை வாய்த்திருப்பவர்கள் என்றால் தமிழர்களுக்கும் நூலகங்களுக்கும் பெரிய அரசியல் பொருத்தப்பாடு இல்லை என்றே தெரிகிறது. இந்த அவலம் எவ்வகையான அரசியல் சுழியைக் கொண்டுவரப் போகிறது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முப்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணப் பொது நூலகமும் யாழ்ப்பாணப் பட்டினமும் எரிக்கப்பட்ட போது **இரண்டாவது சூரிய உதயம்** என்னும் கவிதையை எழுதினேன். அந்த நாட்களில்தான் யாழ்ப்பாணத்தின் தமிழ் நாளேடான **ஈழநாடு** பணிமனையையும் அச்சுக்கூடத்தையும் தீக்கிரையாக்கினார்கள். ஈழவிடுதலைப் போராட்டம் என்ற வெடிகுண்டின் நீண்ட திரியின் முனையில் அக்கினிக் குஞ்சு ஒன்றை வீசிய காலம் அது. ஆனால், இன்று இனப்படுகொலை நடந்தேறிய பிற்பாடு சாம்பலின் மீதும் புகையினுள்ளும் சித்தம் குழம்பிய நிலையிலிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுடன் சேர்ந்து நின்று கடந்த ஆண்டுகளை ஆற்றாமையோடு திரும்பிப் பார்க்கிறோம். ஹெயின்றிச் ஹைன் என்கிற அறிஞர் ஒருமுறை சொன்னார்: முதலில் அவர்கள் நூல்களை எரிப்பார்கள். பின்பு மக்களை எரிப்பார்கள்.

எங்கள் வரலாற்றிலும் அதுதான் நடந்தது.

யாழ். நூலகம் எரியுண்டபோது நான் யாழ்ப்பாணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மாணவனாக இருந்தேன். நானும் என்னுடைய நண்பர்கள் பலரும் அப்போது பல்கலைக்கழகத்தின் பாலசிங்கம் விடுதியில் தங்கியிருந்தோம். அது உயர்ந்த மாடிக் கட்டிடம். தொலைவிலிருந்து புகை அடர்த்தியாகக் கிளம்புவதைப் பார்த்தோம். துவக்கத்தில் என்ன நடக்கிறது என்று தெரியாவிட்டாலும் மிக விரைவிலேயே தகவல் பரவி விட்டது. தீவிர முயற்சி எடுத்தும் எரிந்து கொண்டிருக்கும் இடங்களுக்கு அன்றிரவு எங்களால் செல்ல முடியவில்லை. படையினரின் வெறியாட்டு பயங்கரமானதாக இருந்தது.மறுநாள் காலைதான் செல்ல முடிந்தது. நாங்கள் அங்கு சென்ற போது நூலகம் முற்றாக எரிந்து போய்விட்டிருந்தது. அதனைப் பார்வையிட்டு அதிர்ச்சியிலும் கோபத்திலும் கையறு நிலையில் துடித்துக் கொண்டிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் எம்மைச் சூழ நின்றனர். இன்னும் பலர் தொடர்ச்சியாக நூலகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். எரிந்துபோன நூலகத்தருகே இருந்த துரையப்பா விளையாட்டரங்கத்தில் தான் தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட நூற்றுக்கணக்கான இலங்கை அரச படையினர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். விளையாட்டரங்கத்தின் பார்வையாளர் பகுதியில் இருந்த உயர்ந்த படிக்கட்டுக்களில் ஏறி நின்று எங்களைக் கேலி செய்தனர் அரச படையினர். அவர்கள் கையில் எதற்கும் தயாராகத் துப்பாக்கி இருந்தது.

“ஐயோ, எல்லாம் போச்சே! பாவம் நீங்கள்” என்று சிங்களத்தில் பேசியபடி எங்களைப் பார்த்துச் சிரித்துச் சிரித்துக் கேலி செய்தார்கள். கவலையில் அழுவது போல வேடிக்கை செய்தார்கள்.அந்தச் சிரிப்பும், கேலியும், களிக்கூத்தும் கொண்டாட்டமும் முப்பத்தொரு ஆண்டுகளுக்குப் பிறகு இன்னும் பெருமளவில் அவர்களிடம் இருக்கிறது. இரண்டாவது சூரிய உதயத்திற்கு அப்பால் என்னிடம் இப்போது இருப்பது **காடாற்று** என்ற புதிய கவிதைகளின் தொகுதி. சாம்பலிலும் புகையிலும் குருதியிலும் கண்ணீரிலும் அன்று பிறந்த என்னுடைய கவிதை மறுபடியும் அதே இடத்தில் வந்து நிற்கிறது. இனப்படுகொலைக்கும் படுகொலையின் மொழிக்கும் இலக்கியத்தினதும் கவிதையினதும் மறுமொழி என்ன என்பது அகற்றப்பட முடியாத பெருமலையாக நமது சிந்தனையிலும் இதயத்திலும் இருக்கிறது.

இந்தக் காலகட்டத்தின் சாத்தியப்பாடுகள், எமக்கு ஏற்பட்ட ஆழமான மன வடுக்கள், கடந்தகாலம் பற்றிய மீள்பரிசீலனை, அரசியல் சுய விமர்சனம், மானுட விழுமியங்களினதும் மனிதநாகரிகத்தினதும் அடிப்படைத் தோல்வி என்பன பற்றிய கருத்தாடல்கள் மெல்ல மெல்ல மேல் எழுகின்றன. நூலகமும், யாழ்ப்பாணமும், ஈழநாடு இதழும் எரியூட்டப்பட்டமையும் அவற்றையொட்டி மேலும் தீவிரம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அரசியல், எனது கவிதா இயக்கத்துக்கு மட்டுமன்றி எனது இதழியல் ஊடகவியல் செயற்பாட்டுக்கும் ஒரு சிறு தீப்பொறியாய் அமைந்தது. எரியூட்டப்பட்டு மறுநாளே 'எரிகிறது யாழ்ப்பாணம்'என்று தமிழிலும் *Jaffna On Fire* என ஆங்கிலத்திலும் துண்டுப்பிரசுர வடிவில் செய்தித்தாளைக் கொண்டு வந்தோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அவையின் சார்பிலும் அவர்களுடைய ஓயாத உழைப்பாலும்தான் இது சாத்தியமாயிற்று.சேத விபரங்கள், நடந்த நிகழ்வுகள் பற்றிய விரிவான செய்திகள் போன்றவற்றைத் தாங்கி இவை கல்லச்சு (Cyclostyle) முறையில் தயாரித்து வெளியிடப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள எந்த அச்சகமுமே இவற்றை அச்சிடப் பயந்த நேரத்தில் கத்தோலிக்கப் பாதிரிமார் சிலருடைய தீவிரமான ஒத்துழைப்பு மூலமே இவற்றை எங்களால் வெளிக்கொணர முடிந்தது. இந்த ஆவணங்களை இப்போது எங்கே போய்த் தேடுவது? ஈழநாடு இதழ் மறுபடியும் வெளிவரத் துவங்கும் வரை தமிழிலும், ஆங்கிலத்திலும் எரிகிறது யாழ்ப்பாணம் இதழ்களை மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் இரு மொழியிலும் வெளிக்கொணர்ந்தோம். தமிழ் ஊடக மொழியைச் செம்மைப்படுத்துவதிலும் மரபற்ற எனது ஆங்கில உரைநடையைத் திருத்துவதிலும் காலம் சென்ற ஏ. ஜே. கனகரத்னா இரவிரவாக உதவி செய்தார். போர்க்கால ஊடகவியலில் கால்பதித்த முதலாவது அனுபவம் அது. என்னைப் போன்ற பல மாணவர்களுக்கு அந்தக் காலம் கோபத்துடன் கூடிய ஒரு பெரிய பயில்புலமாக இருந்தது. எனினும் அநியாயமாக அத்தகைய வரலாறே மறுபடி மறுபடி மீள வருகிறது.

இந்த முயற்சிகளில் இரவு பகலாக எங்களோடு ஈடுபட்டவர்களும் நூலகம் எரியுண்ட இரவும் அதற்குப் பிற்பாடும் அயராமல் உழைத்தவர்களும் பின்னர் பல்வேறுபட்ட போராளி அமைப்புகளில் இணைந்து விட்டார்கள். பிற்பாடு பலர் முக்கியமான தலைவர்களாக மாறி விட்டனர். பலர் இன்று விடுதலைப் போரில் கொல்லப்பட்டு விட்டார்கள். சிலர் காணாமல் போய் விட்டார்கள். சிலர் இப்பொழுது புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். வேறு சிலர் இப்போது ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்ட அரசியல் தலைவர்களாக இருக்கிறார்கள்(!!!). இன்னும் சிலர் தொடர்ச்சியாக அரசியல் அஞ்ஞாத வாசத்தில் ஆழ்ந்துள்ளனர். இவர்கள் அனைவரையும் இன்று நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவர்கள் எல்லோரையும் பெயர் சொல்லி அழைக்கவும் முடியவில்லை.

நூலக அழிப்புக்கும் இன அழிப்புக்கும் இடையில் வெகுதூரமில்லை என்பது உலக வரலாறு எமக்கு ஏலவே சுட்டிக் காட்டிய ஒன்றுதான். ஒன்றிலிருந்து மற்றையதைப் பிரிக்க முடியாது என்பதும் பண்பாட்டுப் படுகொலை, அறிவியல் படுகொலை, மெல்ல மெல்லக் கொல்லும் இனப்படுகொலை என எல்லாமே இனப்படுகொலையின் பல்வேறு முகங்களும் முகாம்களும் தான்.

எனினும் மஹாகவி தனது கவிதையொன்றில் சொல்வது போல **மீண்டும் தொடங்கும் மிடுக்கு** என்பதைத்தான் நாங்களும் சொல்ல வேண்டும்.

நன்றி: ஞாயிறு தினக்குரல், 15 ஏப்ரல் 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிக்க முடியாத நூலகம்

**ரவிக்குமார்**

''எனது தந்தையர் நாடு இறந்துவிட்டது
அவர்கள் புதைத்தார்கள் அதை
நெருப்பில்
நான் வாழ்கிறேன்
வார்த்தை
என்ற என் தாய் நாட்டில் "

ஜெர்மனியைச் சேர்ந்த ரோஸ் ஆஸ்லேண்டர் (1901-1988) என்ற கவிஞர் எழுதிய இந்தக் கவிதை யுத்தத்தால் சிதைக்கப்படும் எந்தவொரு நாட்டுக்கும் பொருந்தக்கூடியது. வீடு தகர்க்கப்படும்போது, சொந்த நிழலும்கூட எரிந்துபோய்விடும்போது, நாடென்று உரிமை பாராட்ட எதுவும் இல்லாமல் ஆகிவிடும்போது ஒரு மனிதனிடம் எஞ்சியிருப்பது சொல் மட்டும் தான். அவன் அதைக்கொண்டு முதலில் ஒரு இருப்பிடத்தை உருவாக்குகிறான், மரங்களையும், கனிகளையும்,பறவைகளையும் வானத்தையும் சொற்களால் படைக்கிறான். பின்னர் ஒரு நாட்டையே உருவாக்குவது அவனுக்கு சாத்தியமாகிறது. 'மௌனத்தில் உறைந்திருக்கிறது வரலாறு,அந்த வரலாற்றை மீண்டும் மீண்டும் உச்சரித்துக்கொண்டே இருக்கிறது வார்த்தை.'

புத்தகங்கள் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அதை எரிக்கிற மூடத்தனமும் இருந்து வந்திருக்கிறது.மதத்தின் பெயரால், அதிகாரத்தின் பெயரால் வரலாறு நெடுக லட்சக்கணக்கான நூல்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் அறிவாற்றலுக்கு அடையாளமாகத் திகழ்ந்த நாளந்தாவின் நூலகம் அன்னிய ஆக்கிரமிப்பாளர்களால் எரியூட்டப்பட்டபோது அந்தத் தீ பல மாதங்கள்வரை அணையாமல் எரிந்துகொண்டே இருந்ததென வரலாற்றாளர்கள் சொல்கிறார்கள்.நூல்களின்மீதான வெறுப்பு அறிவு குறித்த அச்சத்திலிருந்து எழுகிறது.நூல்களை எரிப்பதன்மூலம் அறியாமை இருளைப் பெருகச்செய்யவேண்டும் என்பதே ஆதிக்கவாதிகளின் நோக்கம். ஆனால் ஒரு நூலை எரிக்கும்போது அதிலிருந்து எழும் புகை எரிப்பவனின் நெஞ்சுக்குள் புகுந்து அவனது மூளையை மங்கச் செய்கிறது. ஏற்கனவே அவனுள் இருக்கும் இருள் இன்னும் அடர்ந்து வெளியெங்கும் பரவுகிறது. அதில் சூரிய கிரணங்களும் மறைந்து போய்விடுகின்றன. நூல்களை எரிக்கும் நாட்டில் எப்போதும் இரவுதான். நிலவுகூட இல்லாத இரவு.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாக இருந்த யாழ் நூலகத்தில் சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓலைச்சுவடிகளும் அங்கு பாதுகாக்கப்பட்டிருந்தன. சிங்களப் பேரினவாதிகள் அதை தீயிட்டுக் கொளுத்தினார்கள். இருபதாம் நூற்றாண்டின் இனவெறிக் கொடுமைகளில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக அமைந்துவிட்டது அந்த நிகழ்வு. மூன்று நாட்கள் அந்த நூலகம் எரிந்துகொண்டே இருந்தது. அதைப் பார்த்த மாணவர்களும் இளைஞர்களும் இனி இந்த நாட்டில் சமாதானத்தோடு வாழமுடியாது என்று முடிவெடுத்ததில் வியப்படைய எதுவுமில்லை.

ஈழ மக்களின் நினைவில் யாழ் நூலக எரிப்பு சுட்ட வடுவாக நிலைபெற்றுவிட்டது. எனினும் வரலாற்றின் முரண்நகை கொடுமையானது. எந்தவொரு அநீதியைப் பார்த்துக் கிளர்ந்தெழுந்து இளைஞர்கள் போராளிகளாக மாறினார்களோ அதே கொடுமையை அவர்களே செய்யும் நிலை ஏற்பட்டது. பேரினவாதிகள் நூலகத்தை எரித்தார்கள். போராளிகள் எரிப்பதற்கு நூலகம் எதுவும் எஞ்சியிருக்கவில்லை,எனவே படைப்பாளிகளே தமது படைப்புகளை எரிக்கும் நிலையை அவர்கள் உருவாக்கினார்கள்.

யாழ் நூலகம் எரியுண்டபோது அதைக் கண்டு குமுறியவர்கள் மீண்டும் அப்படியொரு நூலகத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்று தமக்குள் உறுதியேற்றிருப்பார்கள். அந்த விருப்பம் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஈடேறியது என்றாலும், 'இது எத்தனை நாளைக்கு ?' என்ற கேள்வி ஒவ்வொரு நெஞ்சிலும் எழாமல் இல்லை. நூல்கள் காகிதத்தால் தயாரிக்கப்படுகின்றன.காகிதம் நெருப்பின் உணவு. நெருப்போ ஆதிக்கவாதிகளின் கையிலிருக்கும் ஆயுதம்.

குழந்தையின் அறுக்கப்பட்ட குரல்வளையிலிருந்து பெருகும் குருதியைப்போல பாய்கிறது காலம்.அதில் அடித்துச் செல்லப்படுகிறது ஏதிலிகளின் வாழ்க்கை.அவர்கள் நூல்களைத் தெப்பங்களாக்கி தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவலத்தின் எதிர்வினையாக எழுந்ததுதான் நூலகம் என்ற பெருங்கனவு. எரிக்கமுடியாத எண்வயத் தொழில் நுட்பத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டம் 2005 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஈழத்து எழுத்தாவணங்களை எண்வயப்படுத்தி உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் இணையத்தின்மூலம் கொண்டு சேர்க்கும் மாபெரும் பணி அது. அதில் இன்று பத்தாயிரம் நூல்கள் திரட்டப்பட்டிருக்கின்றன.

எண்வயத் தொழில் நுட்பம் நமது வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் வியாபித்துவிட்டது. அது இல்லாமல் இன்று கலைப் பொருட்களின் பரிவர்த்தனை சாத்தியமில்லை. இன்றைய தகவல் தொடர்பு யுகத்தில் நாம் எல்லோரும் எண்வயத்தொழில் நுட்பத்தால் பிணைக்கப் பட்டிருக்கிறோம். அச்சுத் தொழிலில் அது ஏராளமான சாத்தியப்பாடுகளை அடையாளம் காட்டியிருக்கிறது. அதையொட்டி உலகிலுள்ள பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் இன்று எண்வய நூலகங்களை (டிஜிட்டல் லைப்ரரிகளை) உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றை **சுவர்கள் இல்லாத நூலகங்கள்** என்று குறிப்பிடுகிறார் **நூல்களின் வரலாற்றறிஞர்** என அடையாளப்படுத்தப்படும் ராபர்ட் டார்ன்டன் என்ற சிந்தனையாளர்.

மங்கோலியாவில் தேசிய எண்வய நூலகம் உருவாக்கப்பட்டுள்ளது; டச்சுக்காரர்கள் 1470 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தம் நாட்டில் வெளியான அத்தனை அச்சுப் பிரதிகளையும் எண்வயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; ஃப்ரான்ஸ் அரசாங்கம் எண்வய நூலகம் ஒன்றை உருவாக்கும் திட்டத்துக்காக 750 மில்லியன் ஈரோக்களை ஒதுக்கியிருக்கிறது. ஜப்பான் அரசாங்கம் இரண்டே ஆண்டுகளில் தமது நாட்டில் இருக்கும் அனைத்து நூல்களையும் எண்வயப்படுத்துவதென அறிவித்து தீவிரமாக இதில் ஈடுபட்டிருக்கிறது. ஆஸ்திரேலியா, நார்வே எனப் பல்வேறு நாடுகளும் இந்த முயற்சியில் இறங்கியுள்ளன. இந்திய அரசும்கூட தேசிய எண்வய நூலகம் ஒன்றை உருவாக்கிகொண்டிருக்கிறது. பெங்களூரிலிருக்கும் 'இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயன்ஸ்' நிறுவனத்தின் உதவியோடு மேற்கொள்ளப் பட்டிருக்கும் அந்தத் திட்டத்தில் சுமார் ஆறாயிரம் தமிழ் நூல்கள் தற்போது உள்ளன. எண்வய நூலகங்களை உருவாக்குவதில் உலகநாடுகள் காட்டும் முனைப்பைப் பார்த்த அமெரிக்காவும் அதற்கான பணிகளை வேகவேகமாகச் செய்துவருகிறது. **நேஷனல் டிஜிட்டல் லைப்ரரி ஆஃப் அமெரிக்கா** என்ற திட்டம் அறிவு சேகரங்களை அமெரிக்கர்களுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் பொதுவாக்குவது என்ற நோக்கத்தோடு துவக்கப்பட்டிருக்கிறது.

நூல்களை எண்வயப்படுத்தி அவற்றை இணையத்தின்மூலம் வழங்கும் திட்டத்தை எந்தவொரு அரசாங்கமும் செயல்படுத்துவதற்கு முன்பே கூகுள் நிறுவனம் துவக்கிவிட்டது. உலகில் உள்ள அத்தனை மொழிகளிலும் அச்சிடப்பட்ட நூல்கள் அனைத்தையும் எண்வயப்படுத்தவேண்டும் என்பதே கூகுளின் நோக்கம். சுமார் ஒன்றரைகோடி நூல்களை அது ஸ்கேன் செய்து எண்வயப்படுத்தி யிருக்கிறது. ஆனால் சட்டரீதியான சிக்கல்களில் அந்தத் திட்டம் சிக்கிக்கொண்டு இன்னும் முழுமையாக நடைமுறைக்கு வராமல் கிடக்கிறது.

ஆனால் இப்படியான அரசாங்க ஆதரவோ அல்லது கூகுள் நிறுவனம் போல வியாபார நோக்கமோ இல்லாமல் செயல்பட்டு வருகிறது 'நூலகம்' திட்டம். இது மிகப்பெரிய சாதனை என்றுதான் சொல்லவேண்டும்.

எண்வயத் தொழில் நுட்பத்தில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தற்போது பயன்பாட்டில் இருக்கும் ஈ-ரீடர்கள் சில காலாவதியாகும்போது உண்டாகும் பிரச்சினைகளை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று அவர்கள் எச்சரிக்கின்றனர். நூலகத் திட்டத்தைச் சேர்ந்தவர்கள் நிச்சயம் இந்தத் தொழில்நுட்பப் பிரச்சினையை உணர்ந்திருப்பார்கள்.

இலங்கை போன்ற, இன முரண்பாடுகள் கூர்மைப்பட்டிருக்கும் சமூகங்களில் ஒரு இனம் தனது அறிவு சேகரங்களைக் காப்பாற்றி அடுத்தடுத்த தலைமுறையினருக்குக் கொண்டுசெல்ல மிகப்பெரிய அளவில் உதவக்கூடியது எண்வயத் தொழில்நுட்பம் . அதைச் சரியாகப் புரிந்துகொண்டு நூலகத் திட்டம் சரியான காலத்தில் துவக்கப்பட்டிருக்கிறது. 'நூலகம்' எண்வய நூலகத்தில் நூல்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள், எழுத்தாளர்கள், பதிப்பகங்கள், நூல்வகை, பதிப்பிக்கப்பட்ட ஆண்டு எனப் பல்வேறு வகையான பகுப்புகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. மலையக ஆவணகம், முஸ்லிம் ஆவணகம், பெண்கள் ஆவணகம், தலித் ஆவணகம் என்ற பகுப்புகளும் செய்யப்பட்டு வாசகர்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. எந்தவொரு நூலையும் எளிதாகத் தரவிறக்கம் செய்து வாசிக்கமுடியும் என்பது இதன் கூடுதல் சிறப்பு. இந்த எண்வய நூலகம் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளில் சுமார் எழுபது லட்சம் தடவைகளுக்குமேல் பார்வையிடப்பட்டது. துவக்கத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களே அதிகம் இந்த நூலகத்தைப் பார்வையிட்டார்களெனவும் இப்போதோ இந்தியாவிலிருந்துதான் அதிகமான பார்வையாளர்கள் வருகிறார்கள் எனவும் இதன் பொறுப்பாளர்கள் கூறுகின்றனர்.

நூலகத் திட்டத்தில் தற்போது ஈழத்து நூல்கள்மீதே அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது என்றாலும் அதை ஒட்டுமொத்தத் தமிழ் நூல்களுக்குமான வெளியாக விரிவுபடுத்தவேண்டும்.அதற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த சிந்தனையாளர்களும், கல்வியாளர்களும் தாமே முன்வந்து பங்களிப்புச் செய்யவேண்டும். தற்போது தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் நடுவாந்தர மற்றும் சிற்றிதழ்களின் எண்வயப் பிரதிகளைப் பெற்று அவற்றையும் நூலகத்தில் சேர்க்கலாம். நூல்களை ஸ்கேன் செய்து இணையத்தில் ஏற்றுவதற்கு தமிழ்நாட்டில் இருப்பவர்கள் தன்னார்வத்தோடு முன்வர வேண்டும். அதை எப்படிச் செய்வது என்பதை அவர்களது இணையதளத்தில் எளிமையாக விளக்கியிருக்கிறார்கள். ஈழத் தமிழ் நூல்களைக் கைவசம் வைத்திருப்போர் அவை குறித்த விவரங்களை நூலகத் திட்டத்தின் பொறுப்பாளர்களோடு பகிர்ந்துகொண்டால் யாழ் நூலகத்தைவிடவும் மிகப்பெரிய நூலகத்தை உருவாக்கிவிடமுடியும். தற்போது பத்தாயிரம் நூல்களைத் தொட்டிருக்கும் நூலகம் இன்னும் இரண்டே ஆண்டுகளில் ஒரு லட்சம் நூல்கள் கொண்டதாக வளரவேண்டும். தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஒத்துழைத்தால் இந்தக் கனவை நனவாக்குவது பெரிய விஷயமாக இருக்காது.

**நன்றி: குமுதம் தீராநதி மார்ச்** 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org